OS.321/2022

Dated: 16.06.2026

DW2: திரு. பாலசுப்பிரமணியன்

குறுக்கு விசாரணை (5ம் பிரதிவாதி தரப்பில்)

1. 2ம் பிரதிவாதியின் குடும்ப வரவு செலவு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். குத்தகை, ஒத்தி, பகுதி ஆகியவற்றிற்கான வேறுபாடு எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் 3ம் நபர்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அவர்கள் யார் யார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் உட்குத்தகைக்கு ஒப்புக்கொண்ட நிலம் யாருக்கு சொந்தமானது என்றால் தியாகராஜன், ரமேஷ் ஆகியோர்களுக்கு சொந்தமானது. மேற்கண்ட சொத்துக்களின் புல எண் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் சொல்லிக்கொடுத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் 2ம் பிரதிவாதி சொன்னார் என்றால் சரிதான். வாக்குமூலத்தில் சொல்லியுள்ள திருநாவுக்கரசு திருச்சியில் உள்ளார். ஆண்வாரிசு தாவா சொத்துக்களை பிரித்துக்கொண்ட விபரம் எனக்கு தெரியாது, பிரச்சனை இருந்து வருவது எனக்கு தெரியும். ஒத்திக்கு ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்படும் என்றால் சரிதான். அதேபோல் பகுதி மற்றும் குத்தகைக்கும் ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்படும் என்றால் சரிதான். அதுபோன்ற ஆவணங்கள் எதுவும் நான் பார்த்தேனா என்றால் 2ம் பிரதிவாதி காண்பித்துள்ளார்.

2). சுகுமார் என்பவரை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும், அவர் எனக்கு நல்ல நண்பர். எனது அண்ணனுக்கும் கூட்டாளியாவார். 2ம் பிரதிவாதி எனக்கு நண்பர் என்பதாலும், எனது

சகோதருக்கும் கூட்டாளி என்பதாலும், 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதவாக பொய்யான சங்கதிகளை கண்டு தயார் செய்து கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)

மேற்படி குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(ஒ/ம்) பெ. குமார்
முதன்மை சார்பு நீதிபதி.
தஞ்சாவூர், நாள். 16/06/2026